සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 07	முதலாம் தவணைப் பரீட்சை - 2019	12	T	

சுட்டெண் .....

சைவநெறி

நேரம் 2 மணித்தியாலம்

பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

01. திருச்சிராப்பள்ளிக் குன்றுடையான் என்பவர்,
1. விநாயகர் 2. முருகன் 3. சிவபெருமான் 4. விஷ்ணு

02. கந்தப்புராணத்தைப் பாடியவர்,
1. அருணகிரிநாதர் 2. சம்பந்தர்
3. மாணிக்கவாசகர் 4. கச்சியப்ப சிவாச்சாயரியார்

03. சைவ இலக்கியங்களாவன பின்வருவனவற்றுள்,
1. புராண இலக்கியம் 2. திருக்குறள் 3. பகவத் கீதை 4. வேதம்

04. சைவர்களிடையே காணப்படும் நற்பண்புகள் அடங்கிய தொகுதி,
1. பணிவு, பொறாமை 2. விட்டுக் கொடுக்காமை, இரக்கம்
3. இரக்கம், அன்பு 4. அன்பு, வெறுப்பு

05. நல்லொழுக்கங்களை போதித்து கல்வியையும் வழங்கும் இடம்,
1.ஆலயம் 2. வீடு 3. பாடசாலை 4. அலுவலகம்

06. வெள்ளிக்கிழமைகளில் கோயில்களிலும், பாடசாலைகளிலும் பஞ்சபுராணம் ஓதப்பட்டு விசேடமாக தொடர்ந்து பாடப்படுவது,
1. கந்தப்புராணம் 2. சிவப்புராணம் 3. திருமந்திரம் 4. பக்திப்பாடல்

07. திருச்சிராப்பள்ளிக்கும் திருவானைக்காவிற்கும் இடையே ஓடும் ஆறு,
1. கங்கை 2. யமுனை 3. காவிரி 4. மகாவலி

08. தோத்திரப் பாடல்களை நாம் ஓதுவதால் நாம் பெறும் நன்மை,
1. களைப்பு ஏற்படும் 2. வெறுப்பு ஏற்படும்
3. தாகம் ஏற்படும் 4. இறையுணர்வு ஏற்படும்

09. நவராத்திரி காலங்களில் நாம் செய்யக்கூடிய இறை செயல்களில் ஒன்று,
1. கொலு வைத்தல் 2. விளையாடுதல்
3. பிறர் குறை காணுதல் 4. வீட்டிற்குள் அமைதியாக இருத்தல்.

10. மாணவர்கள் பாடசாலைகளில் நிகழும் சமய விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம்,
1. சண்டை ஏற்படுகின்றது 2. கூட்டுறவு ஏற்படுகின்றது.
3. வெறுப்பு ஏற்படுகின்றது 4. கால தாமதம் ஏற்படுகின்றது

- **இல. 11 - 15 வரையான வினாக்களுக்குரிய பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

(தாயுமான சுவாமி / சைவசமய / குகனை / உயிர்கள் / பூமி)

11. பொறுத்தார் ..... ஆள்வார்.

12. இராமன் ..... தமது சகோதரனாக ஏற்றுக் கொண்டார்.

13. மாணவர்கள் ..... ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

14. கடவுள் ..... அனைத்திற்கும் மேலானவர்.

15. மூதாட்டி திருச்சிராப்பள்ளி ..... மீது பெரும் பக்தி கொண்டவர்.

- **இல. 16-20 வரையான வினாக்களுக்கு சரியாயின் “சரி” எனவும் பிழையாயின் “பிழை” எனவும் எழுதுக.**

16. துன்பம் வரும் போது இறைவன் வேண்டிய வடிவில் வந்து அருள்பாலிக்க மாட்டார். (.....)

17. பாடசாலை நிறைவுறும் வேளையில் மாணவர்கள் வகுப்பறைகளில் அமைதியாக எழுந்து திருமுறைகளை ஓத வேண்டும். (.....)

18. பஞ்சமாபாதகங்களைத் தவிர்த்தல் சிறந்தது. (.....)

19. நன்றி மறவாமைக்கு எடுத்துக் காட்டாக கர்ணனை குறிப்பிடலாம். (.....)

20. நன்றி மறத்தல் நன்றன்று. (.....)

(2x20=40 புள்ளிகள்)

* * * * *

பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டையும், பாடியவரையும் குறிப்பிடுக.
    i. விருது குன்றமா மேருவில்.....
    ii. நங்க டம்பனைப்.....
    iii. மாதர்ப் பிறைக்கண்ணி.....
    iv. நிரைகழ லரவம்..... (பு. 20)

02. i. இறைவன் தயாயாக வந்து அருள் கொடுத்த இரு சந்தர்ப்பங்களைத் தருக. (பு. 04)
    ii. மூதாட்டி செய்த இறைத் தொண்டு யாது? (பு. 04)
    iii. தாயுமானவர் கதையினூடாக நீர் பெற்றுக் கொண்ட படிப்பினை யாது? (பு. 03)

03. i. பாடசாலையில் கைக் கொள்ளப்படும் சமய பழக்கவழக்கங்கள் 4 தருக. (பு. 04)
    ii. திருச்சிற்றம்பலம் கூறப்படும் சந்தர்ப்பம் யாது? (பு. 04)
    iii. பஞ்சபுராணம் பாடும் ஒழுங்கு முறையைத் தருக. (பு. 03)

04. i. பாடசாலையில் நடைபெறும் செயற்பாடுகள் மூலம் நாம் பேணக்கூடிய நல்லொழுக்கங்கள் 4 தருக. (பு. 04)
    ii. நாம் விலக்கி கொள்ள வேண்டிய செயல்கள் 4 தருக. (பு. 04)
    iii. நவராத்திரி விரத காலத்தில் பாடசாலையில் நடைபெறும் போட்டி நிகழ்வுகள் 3 தருக. (பு. 03)

05. i. வாழ்வியல் நற்பண்புகள் 4 தருக. (பு. 04)
    ii. பஞ்ச பாண்டவரின் பெயர்களைக் குறிப்பிடுக. (பு. 04)
    iii. நாம் நீதி நெறியில் வாழ்வதன் மூலம் எதனைப் பெறலாம்? (பு. 03)

06. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
    i. பொறுமை
    ii. பாடசாலையில் சைவம்
    iii. ஆலய வழிபாடு
    iv. நவராத்திரி விழா (பு. 10)

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
முதலாம் தவணைப் பரீட்சை - 2019
தரம் 07 - சைவநெறி
விடைப்பத்திரம்

பகுதி I

வினா இல.		விடை	வினா இல.		விடை
01.		3	02.		3
03.		1	04.		3
05.		3	06.		2
07.		3	08.		4
09.		1	10.		2
11.		பூமி	12.		குகனை
13.		சைவ சமய	14.		உயிர்கள்
15.		தாயுமான சுவாமிகள்	16.		பிழை
17.		சரி	18.		சரி
19.		சரி	20.		சரி

பகுதி II

01.				பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.	20
02.	i.			மூதாட்டியின் மகள் பிரசவ வலியால் துடித்த தருணம் தாயாக சென்று உதவியமை / தாய் பன்றி இறந்த போது தாய் பன்றியாக வந்து குட்டிகளுக்கு பால் கொடுத்தமை.	4
	ii.			தினமும் திருச்சிராப்பள்ளிக்கு சென்று அங்குள்ள இறைவனுக்குப் பூமாலை கட்டிக் கொடுக்கும் திருத்தொண்டு	4
	iii.			கடவுளை நம்பினோர் கைவிடப்படார். (பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.)	3 11
03.	i.			காலைப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளுதல் /ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்தல் / வெள்ளிக்கழமை பிரார்த்தனைகளில் பங்கு கொள்ளுதல் / பாடசாலையில் கொண்டாடப்படும் விழாக்களில் பங்கு கொள்ளல்.	4
	ii.			தேவாரம் பாடும் முன்பும், பாடிய பின்பும்	4
	iii.			தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம்	3 11
04.	I.			பாடசாலைக்கு நேரத்திற்கு வருதல் / சுத்தம் பேணுதல் / பாடசாலையை நேசித்தல் / காலைக் கூட்டத்தில் பங்கு கொள்ளல்	4
	ii.			எரிச்சல், பொறாமை, கோபம், தீய சொற்கள் பேசுதல்.	4
	iii.			பூமாலை கட்டுதல், கோலமிடுதல், பேச்சு, நடனம், கட்டுரை	3 11
05.	i.			பணிவு, நன்றி மறவாமை, நீதி, நேர்மை, பொறுமை	4
	ii.			தர்மன், வீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன்	4
	iii.			இறையருளைப் பெறலாம்	3 11
06.				பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.	11